தகவல் அறியும் உரிமைச் சட்டம் 2005

# தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

**ஆணை நாள் 05.06.2025**

**முன்னிலை**

**திரு முகம்மது ஷகீல் அ்தர், இகாப (ஓய்வு)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண். SA 1862/SCIC/2023

திரு கி. மருதுபாண்டி — மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத் தகவல் அலுவலர் /
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
போகலூர், இராமநாதபுரம் மாவட்டம். --- பொது அதிகார அமைப்பு

## ஆணை

மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005 பிரிவு 6(1)-ன்கீழ், 10.10.2022 தேதியிட்டு பொதுத் தகவல் அலுவலர், சார்பதிவாளர் அலுவலகம், போகலூர் என்ற முகவரிக்கு அனுப்பிய மனுவில். இராமநாதபுரம் மாவட்டம் பரமக்குடி தாலூகா போகலூர் பஞ்சாயத்து சர்வே எண்.35ல் திரு இராமதாஸ் என்பவர் பெயரில் உள்ள மனையை அவரது மனைவி மற்றும் பிள்ளைகளுக்கு பங்களித்து பதியப்பட்ட ஆவணங்கள் தொடர்பாக 4 இனங்களில் தகவல்களை வழங்குமாறு கோரியுள்ளார்.

2. பொதுத் தகவல் அலுவலரால் 25.10.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. மனுதாரர் 14.11.2022 தேதியிட்டு

சட்டப்பிரிவு 19(1)ன் கீழ் முதல் மேல்முறையீட்டு மனுவை மேல்முறையீட்டு அலுவலருக்கு அனுப்பியுள்ளார். மேல்முறையீட்டு அலுவலரால் 25.11.2022 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளது. அதனையடுத்து மனுதாரர் 30.01.2023 தேதியிட்டு சட்டப்பிரிவு 19(3)ன் கீழ் இரண்டாம் மேல்முறையீட்டு மனுவினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். அதனைப்பெற்ற ஆணையம் SA 1862/2023 ஆக பதிவு செய்து, மேற்சொன்ன இரண்டாம் மேல் முறையீட்டு மனு குறித்து மனுதாரர் கோரியுள்ள தகவல்களை வழங்க பொதுத் தகவல் அலுவலருக்கு 20.04.2023 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக ஆணையத்தால் அறிவுறுத்தப்பட்டிருந்தது. அதனடிப்படையில் 06.11.2024 தேதியிட்ட கடிதத்தின் வாயிலாக மனுதாரருக்கு தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாக பொதுத் தகவல் அலுவலர் ஆணையத்திற்கு தெரிவித்துள்ளார். மனுதாரர் 15.11.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார். இந்நிலையில் இந்த இரண்டாம் மேல் முறையீட்டு மனுவின்மீது காணொளிக்காட்சி வாயிலாக விசாரணை செய்யும்பொருட்டு, தமிழ்நாடு தகவல் ஆணையத்தின் 05.06.2025 தேதியிட்ட காணொளிக் காட்சி விசாரணைக்கு சம்மந்தப்பட்ட மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நேரடியாக ஆஜராகுமாறு மனுதாரருக்கும், ஆணையத்தில் நேரடியாக ஆஜராகுமாறு தெரிவித்து பொதுத் தகவல் அலுவலருக்கும் ஆணையத்தால் விசாரணை அறிவிப்பு அழைப்பாணைகள் அனுப்பப்பட்டது.

3. இன்று தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தின் வாயிலாக நடைபெற்ற காணொளிக் காட்சி விசாரணைக்கு மனுதாரர் ஆஜராகவில்லை. **தமிழ்நாடு தகவல் ஆணையம் (மேல் முறையீட்டு விதிகள், 2012) விதி 7-ன்படி மனுதாரர் விசாரணைக்கு ஆஜராவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. மனுதாரரின் வருகையின்மை பதிவு செய்யப்படுகிறது.** பொது அதிகார அமைப்பின் சார்பில் திருமதி த. ஜெயப்பிரியா, பொதுத் தகவல் அலுவலர் / சார்பதிவாளர், சார்பதிவாளர் அலுவலகம், போகலூர் ஆணையத்தில் நேரில் ஆஜரானார்.

4. இன்றைய விசாரணைக்கு ஆஜரான பொதுத் தகவல் அலுவலர் மனுதாரரின் 10.10.2022 தேதியிட்ட சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு 25.10.2022, 25.11.2022 மற்றும் 06.11.2024 ஆகிய தேதிகளிட்ட கடிதங்களின் வாயிலாக தகவல்கள் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்து, அதற்கான கடித நகல்களை விசாரணையின்போது ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மனுதாரர் 15.11.2024 தேதியிட்டு தனது ஆட்சேபனைக் கடிதத்தினை ஆணையத்திற்கு அனுப்பியுள்ளார்.

5. பொதுத் தகவல் அலுவலரால் வழங்கப்பட்ட தகவல்கள் குறித்து தனது கருத்துக்களை எடுத்துரைக்க மனுதாரருக்கு ஆணையத்தால் வாய்ப்பளிக்கப்பட்டும் அவர் இன்றைய காணொளிக்காட்சி விசாரணைக்கு ஆஜராகவில்லையென்பதால்,

**இந்த இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணை முற்றாக்கம் செய்து உத்தரவிடப்படுகிறது.**

**ஒம்/-(முகம்மது ஷகீல் அ்தர்)**
**மாநில தலைமை தகவல் ஆணையர்**

**//ஆணைப்படி//**

**உதவி பதிவாளர்**

**<u>வழக்கு எண். SA 1862/SCIC/2023</u>**
**<u>பொது அதிகார அமைப்பு:-</u>**

பொதுத் தகவல் அலுவலர்/
சார்பதிவாளர்,
சார்பதிவாளர் அலுவலகம்,
போகலூர், இராமநாதபுரம் மாவட்டம்.

**<u>மனுதாரர்:-</u>**
திரு கி. மருதுபாண்டி,
எண்.46A, இரயில் நகர்,
R.M.S காலனி,
நாஞ்சில்கோட்டை சாலை,
தஞ்சாவூர் 613 006

Copy to: File TK/PS